*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **31 டிசம்பர், 2025**

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு கலந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு புதிய ஆண்டும் புதிய நம்பிக்கையை, புதிய தொடக்கத்தை நமக்கு தருகிறது. நம்முடைய அனுபவங்கள் தந்த பாடங்களை கொண்டு எதிர்காலத்தை நம்பிக்கையோடு வரவேற்போம்.

கடந்த ஆண்டில் புதுச்சேரி மாநிலம் கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு, தொழில் வளர்ச்சி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு என்று பல துறைகளிலும் புதிய உச்சத்தை தொட்டு இருக்கிறது. அதன் பயன் அனைவரையும் சென்றடைய, நாம் அனைவரும் ஒற்றுமையோடு செயல்பட உறுதி ஏற்போம். அதுவே பாரதப் பிரதமர் சொன்ன "அனைவரின் வளர்ச்சி அனைவருக்குமான வளர்ச்சி".

வரும் 2026- புதிய ஆண்டும் புதுச்சேரி மக்களுக்கு ஏற்றத்தை தரும் ஆண்டாக, முயற்சிகளில் வெற்றி தரும் ஆண்டாக, அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியை தரும் ஆண்டாகவும் அமைய வாழ்த்துகிறேன்.

புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

(K. கைலாஷ்நாதன்)